**ARTICLE 40 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00082**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 80–84
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

# அற இலக்கியங்களில் நட்பு

**ரந்திர்குமார் ஆ**[1,*]
[1]இணைப் பேராசிரியர் மதிதா இந்து கல்லூரி, திருநெல்வேலி, India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** ரந்திர்குமார் ஆ — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்
நட்பினை பற்றி அற இலக்கியங்கள் கூறுகின்ற மனித பண்புகளையும் அற செயல்பாடுகளையும் நட்பின் சிறப்பினையும் ஆராய்வதாக கட்டுரை அமைந்துள்ளது. திருக்குறளின் பெருமையினை சிறப்பாக எடுத்துக் கூறுகின்றதாக இந்த ஆய்வு அமைகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** நட்பு - நட்பின் வகைகள் - நட்பினால் ஏற்படும் நன்மைகள் - கூடா நட்பு - நல் நட்பு

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ஆ, ர. (2026). அற இலக்கியங்களில் நட்பு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

## முன்னுரை

உலக இலக்கியங்களில் தமிழ் இலக்கியம் தனிசிறப்பு பெற்றவை. தமிழ் முக்கிய நூல்களுள் திருக்குறள் தனித்த பெருமை உடையது ஆகையால் உலகப் பொதுமறை என்று உலக அளவில் போற்றப்படுகிறது. உலக அளவிலான மக்கள் அனைவருக்கும் மனித பண்புகளில் நட்பு மேம்பட்டதாகத் திகழ்கிறது. அற இலக்கியங்கள் நட்பு பற்றி போற்றுகின்றன. அற இலக்கியங்களில் திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை ஆகியவற்றில் நட்பு பற்றி இடம் வரும் செய்திகள் குறித்து இக்கட்டுரை ஆராய்கின்றது.

## நட்பு என்னும் பண்பு

இலக்கியங்களை காலக் கண்ணாடி என்பர். இத்தகைய இலக்கியங்கள் உருவாகுவதற்கு ஏதேனும் தேவை கருதி உருவாக்கப்பட்டிருக்கலாம். நட்பு என்னும் உறவு மேம்பட வேண்டும் என்ற நோக்கமும் காரணமாய் இருக்கலாம். வள்ளுவர் காலத்தில் நட்பிற்கான தேவை இருந்திருக்கலாம். அதன் அடிப்படையில் நட்புக்கான நான்கு அதிகாரங்களைப் படைத்துள்ளார். நட்பு, நட்பு பாராட்டல், தீமை நட்பு, கூடா நட்பு ஆகிய அதிகாரங்களில் நட்பு பற்றிய நேரடியான செய்திகள் இடம் பெறுகின்றன.

நாலடியாரில் நட்பாராய்தல், நட்பு பொறுத்தல், சுற்றந்தழால், கூடா நட்பு ஆகிய அதிகாரங்கள் நட்பு தொடர்பாகப் பெற்றுள்ளன. இங்கு திருக்குறளில் இடம்பெற்றுள்ள நட்பாராய்தல், கூடா நட்பு என்ற தலைப்புகளில் அமைந்த அதிகாரங்களின் பெயர்கள் நாலடியாருக்கும் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நான்மணிக்கடிகை நட்பினால் கிடைக்கும் பலன்கள், நட்பின் ஒற்றுமை வேற்றுமை, நண்பனுக்காக வாழ்ந்தால் உதவுதல், சிறந்த நட்பு, இன்பத்திலும்

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

துன்பத்திலும் இணைந்து கொள்ளும் நிலை, உடன் நிற்கும் நிலை, ஆதரவு கொடுக்கும் அனைத்தும் ஆகியவற்றை எடுத்துரைக்கிறது.

திருவள்ளுவர் தாம் வாழ்ந்த காலத்தில் மன்னராட்சி முறையை இருந்திருக்கலாம். மேலும் ஒவ்வொரு மன்னர்களும் இடையில் சிறு சிறு பூசல்கள் இருந்திருக்கலாம். இதனால் பகை ஏற்பட்டு இருக்கலாம்.

## நல்ல நட்பும் தீய நட்பும்

அதாவது நல்ல நட்பினை முழு நிலவுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார். அதனைப் போன்று தீய நட்பானது நிறைமதியானது நாள்தோறும் குறையும் தன்மை உடையது என்று குறிப்பிட்டுள்ளார்.

குறள்
*“நிறை நீர நீருவர் கேண்மை பிறைமதி*
*பின்னீர பேதையர் நட்பு”*

## விளக்கம்

இதில் நல்லவர்களின் நட்பு ஆனது முழு நிலாவுடன் ஒப்பிடப்படுகிறது. அதுபோல தீயவரின் நட்பானது நாள்தோறும் குறைந்து வருகின்ற பிறைநிலவினைப் போன்று அமையும் என்று கூறுகின்றார்.

## நட்பின் இயல்பு

ஒருவரோடு ஒருவர் நட்பு கொள்ளுதல் என்பது தம்முள் நகைப்புக்கு உரியனவற்றைப் பேசி நகையாடல் பொருட்டாகாது. நண்பர் பழி தரும் செயலைச் செய்யும் போது அவரை இடித்துரைத்து திருத்துதலின் பொருட்டாகும்.

குறள்
*“புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சி தான்*
*நட்பாம் கிழமை தரும்”*

## விளக்கம்

ஒருவரோடு ஒருவர் நண்பராய் இருப்பதற்கு ஓர் ஊரினராய் இருந்தாலும் பலமுறை கண்டு பேசியும் பழகுதலும் ஆகிய காரணங்கள் வேண்டுவதில்லை. இருவருக்கும் உணர்ச்சி ஒத்திருந்தாலே நட்பாகும் உரிமையை கொடுக்கும்.

உண்மையான நட்பின் சிறப்பு

நட்பின் சிறப்பினை வள்ளுவர் தனது குறளில் உடுக்கை இழந்தவன் கைக்கு ஒப்பாக கூறியுள்ளார்.

குறள்
*“உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு”*

## விளக்கம்

என்ற குறளில் உண்மையான நட்பின் சிறப்பினை கூறியுள்ளார். அவையில் ஆடை குறைந்தவனுக்கு அவன் கை உடன் சென்று உதவி செய்யும். ஆடை குறைந்தவனுக்கு துன்பம் வரும்போது அப்போதே சென்று உதவி செய்து அத்துன்பத்தை போக்குவதே நட்பாகும். இதனைப் போன்று பத்து பாடல்களிலுமே நட்பினை மிகத் தெளிவாக கூறியுள்ளார்.

## நட்பாராய்தல்

நாம் நட்புக் கொள்வதற்கு முன்பே நண்பர் ஆவதற்கு உரியரை ஆராயும் திறன் நட்பாராய்தல் என்னும் அதிகாரம் கூறுகிறது.

குறள்
*“உள்ளற்க உள்ளம் சிறுகுவர் கொள்ளற்க*
*அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு”*

## விளக்கம்

தம் ஊக்கம் குறைவதற்கு காரணமாகிய செயல்களை செய்ய எண்ணுதல் கூடாது. அதுபோல் தமக்கு துன்பம் வரும்போது கைவிடுவார் நட்பை கொள்ளுதல் தக்கன்று.

இக்குறள்களில் ஆராய்ந்து நட்பை கொண்டால் வரும் இழுக்கும் நட்பை ஆராயும் முறையும், ஆராய்ந்ததால் நண்பராக கொள்ளப்படுவோர் யார் என்பது, நண்பராக கொள்ளப்படாதவர் யார் என்பதை விளக்கப்பட்டுள்ளன.

## பழமை என்னும் அதிகாரம்

பழமை என்னும் அதிகாரத்தில் நீண்ட காலம் நண்பர்களாக இருந்தவர்களின் பிழைகளை பொறுத்துக் கொள்ளுதல், உடன் இருக்கின்ற மனிதர்கள் அனைவரும் மிகுந்த பொறுமையுடன் மற்றும் கனிவான பேச்சுத் திறமையானவை பெற்று திகழ்தல் வேண்டும். தனது நண்பர்கள் செய்கின்ற சிறு பிள்ளைகளையும் பொறுத்துக் கொள்கின்ற சகிப்புத்தன்மை வேண்டும்.

நெடுநாளைய நண்பர்கள் உரிமையால் செய்வன ஏதேனும் ஒன்றை கேளாது செய்தல், கேடு விளையும் வகையில் செய்தல், அவர்களுக்கு வேண்டியவற்றை அவர்களாகவே எடுத்துக் கொள்ளல், பணிவும் அச்சமும் இல்லாமை, நாம் வெறுக்கத் தகாதவற்றை நண்பர்கள் செய்வார். ஆனால் அதற்கு காரணம் அறியாமை அல்லது மிக்க உரிமை என்று எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

## தீய குணத்தால் நட்பு கொள்ளும் நட்பு

தீய குணத்தால் நட்பு கொள்ளும் நட்பு என்பது நட்பின் பயனின் அளவை பார்க்கும் நண்பரும் விலை கொளும் போது மகளிரும் பிறருக்கு விளையும் துன்பத்தை கருதாது அவர் சோர்வை கருதும் கள்வன் தம்முள் ஒப்பாகும்.

குறள்
*“செய்து ஏமம் சாராத சிறியவர் புன்கேண்மை*
*எய்தலின் எய்தாமை நன்று”*

## விளக்கம்

துன்பம் வரும்போது துணையாகாது விலகிச் செல்லும் கீழ் மக்களது தீ நட்பு ஒருவருக்கு கிடைத்தலினும் கிடைக்காது போதல் நன்று.

குறள்
*“பேதை பெருங்கெழீ, நட்பின் அறிவுடையார்*
*ஏதின்மை கோடி உறும்”*

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## விளக்கம்

அறிவுடையவனது பகைமை கோடி மடங்கு நல்லதாம். செயலும் சொல்லும் ஒன்றுக்கொன்று ஒவ்வாது வேறு வேறாக இருப்பவரின் நட்பு நினைவில் மட்டுமல்லாமல் கனவிலும் இன்னாததாகும்.

குறள்
*“எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீ,*
*மன்றி பழிப்பாற் தொடர்பு”*

## விளக்கம்

மனையில் இருக்கும்போது நட்பு பாராட்டி பலரோடு அவையில் இருக்கும் போது பலர் கூறுவார் நட்பு சிறிதளவும் தம்மை நெருங்காது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

நட்பின் சிறப்பினை பற்றி வள்ளுவர் தனது நூலில் தெளிவாக கூறியுள்ளார்.

## நாலடியார்

நட்பை பற்றி மிக ஆழமான மற்றும் யதார்த்தமான கருத்துக்களை கூறுகிறது. நாலடியார் இதன் நட்பாராய்தல் மற்றும் கூடா நட்பு அதிகாரங்கள் உண்மையான நண்பர்களை அடையாளம் காண்பது எப்படி என்பதை அழகான உவமைகளுடன் விளக்குகிறது.

## கூடா நட்பு

நாலடியாரில் உள்ள 24வது அதிகாரம் கூடா நட்பு எனப்படுகிறது. சுயநலம் கொண்ட போலியானவர்களின் நட்பால் ஏற்படும் தீமைகளையும் அவர்களை எப்படி அடையாளம் கண்டு விலக வேண்டும் என்பதையும் இப்பாடல் மிக ஆழமாக விளக்குகிறது.

## தன்னல நட்பு - பாடல் 231

தம்முடன் ஒருவர் தங்கள் காரியம் முடியும் வரை மட்டுமே நட்புடன் இருப்பார். காரியம் முடிந்தவுடன் நம்மை விட்டு பிரிந்து விடுவார். இத்தகைய சுயநலவாதிகளின் நட்பு கூடாது. இது தன்னல நட்பு எனப்படும்.

நல்லவர்களின் நட்பு மழைக்காலத்தை போன்றது. அது எல்லோருக்கும் பயன்படும். ஆனால் குணம் இல்லாதவர்களின் நட்பு மழை பெய்யாமல் வறண்ட காலத்தை ஒத்தது. இதனால் எந்த வித பயனும் இல்லை.

## அறிவுடையார் நட்பு

நுண்ணிய அறிவுடைய சான்றோருடன் கூடி போவது விண்ணுலக இன்பத்தை போன்றது. ஆனால் அறிவும் நூல்களைக் கற்காத பயனற்றவர் உடன் பழகுவது நரகத்தில் வாழ்வதற்கு சமமான துன்பத்தைத் தரும்.

## நான்மணிக்கடிகை

நண்பர்களுக்கிடையே பொய் புகுதல் இந்த நட்பும் முறிந்து விடும் என்றும் நாவடக்கம் இன்மையால் கோபத்தில் நண்பரின் குறையை கடிந்துரைப்பது நட்பை கடிந்துவிடும் என்று எச்சரிக்கிறது.

பாடல்
*“நகையே இனிது நட்டார் நடுவன் நான்மணி 38:1*
*நசை நலம் நட்டார் கண் நந்தும்”*

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

## விளக்கம்

போன்ற பாடல்கள் நண்பர் ஒருசேர இருக்கும்போது முகம் வளர்ச்சியும் சிரித்து மகிழ்வும் காணப்படுவார்கள் என்கிறது.

நண்பருக்குள்ளே உண்மைதான் முதலில் இருக்க வேண்டும். உண்மை பொய்யாகும் போது அங்கு விரிசல் ஏற்படுகிறது. பொய் சொன்னால் நட்பானது கெட்டு அழியும் என்கின்றார் விளம்பி நாகனார்.

பாடல்
*“நட்டார் கண் விட்ட வினை நான்மணிக்கடிகை 24”*

## முடிவுரை

அற இலக்கியங்களில் நட்பு பற்றி கட்டுரை ஆராய்வதினால் இதில் காணப்படும் நட்பின் வகைகளை மிக தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது. திருவள்ளுவர், விளம்பிநாகனார், சமணமுனிவர் போன்றவர்களின் நட்பின் தன்மையினை பற்றி கூறியுள்ளதையும் மேலும் நட்பில் உள்ள நன்மை தீமைகளை அறியவும் முடிகிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. திருக்குறள் - திருக்குறள் மூலமும் ஆய்வு உரையும் உரை: மருதநாயகம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
2. நாலடியார்
3. நான்மணிக்கடிகை Research Article

© 2026 ரந்திர்குமார் ஆ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..